IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.392/2018

Deposition of PW2 witness of Plaintiff/Petitioner/Defendant /Respondent Solemnly affirmed by Tmt.Swarnalath of this court in accordance with the provision of Evidence Act X 1872 on the day of 16th day of March 2021.

| | |
|---|---|
| Name : Ramesh | Caste : |
| Father's Name: Kandasamy | Calling : |
| Village : | Religion: |
| Taluk : | Age : |
| Date : 16.03.2021 | |

முதல் விசாரணை:–

அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். நான் சின்னதிருப்பதியில் உள்ள எம்.ஜி.ஆர் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் சேலம் அழகாபுரத்தில் துணிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். வாதி சரண்யாவை தெரியும். தொழில்ரீதியாக அவரை தெரியும். வாதி சரண்யா சின்னதிருப்பதியில் சந்திரன் கார்டனில் கதவு எண் 14/3 ல் டெய்லர் தொழில் செய்கிறார். 2014 லிருந்து 2018 வரை அவருடன் தொழில் செய்து வருகிறேன். நான் ரெடிமேட் துணிக்கடை வைத்திருப்பதால் alteration செய்வதற்காக அவரிடம் துணிகளை கொடுப்பேன். வாதி தொழில் செய்து வரும் மேற்கண்ட கதவு இலக்க எண் 14/3 ல் உள்ள இடத்தில் துணிகளை வாதிக்கு கொடுத்து நான் தொழில் செய்து வருகிறேன். நான் 2018 க்கு பிறகு துணிகளை அவரிடம் கொடுக்க

போகும்போது அவர் அந்த இடத்தில் இல்லை. சரண்யாவிற்கு குடியிருப்பதற்கு அந்த இடத்தில் ஏதோ பிரச்சனை என்பதால் யாரோ அவரை அந்த இடத்திலிருந்து காலி செய்து விட்டார்கள் என்று கேள்விபட்டேன். நான் போனபொழுது அந்தவிடத்தில் மேற்சொன்ன காலகட்டத்தில் பழனிவேல் என்பவர் அந்த இடத்தில் சுவாதீனத்தில் இல்லை.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் துணிக்கடைக்குரிய GST நம்பர் இல்லை என்றால் இருக்கிறது. என்ன நம்பர் என்றால் எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை. எந்த தேதியில் GST நம்பர் வாங்கினேன் என்றால் 2018 ல் GST வந்தது அப்பொழுதே நம்பர் வாங்கி விட்டேன். 2018 ல் டிசம்பர் மாதவாக்கில் GST நம்பர் வாங்கியிருப்பேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. வாதி சரண்யாவிற்கு துணி கொடுத்ததுக்கான ரசீது எதுவும் இல்லை என்றால் அதற்கெல்லாம் இல்லை. துணியை கொடுத்த பிறகு வாதியிடமிருந்து ரசீது வாங்குவது இல்லை என்றால் ஆமாம். சரண்யாவிடமிருந்து துணியை திரும்பி வாங்கும்போதும் பெற்றுக் கொண்டேன் என்ற ரசீதும் அவர் வாங்குவதும் இல்லை என்றால் அந்த மாதிரி எதுவும் இல்லை. 2014 லிருந்து 2018 வரை துணிகள் சரண்யாவிற்கு கொடுத்து திரும்ப பெற்றுக் கொள்வேன் என்று சொல்வது பொய் என்று சொன்னால் அப்படி எல்லாம் இல்லை. வாதி சரண்யா பிரதிவாதிக்கு சந்திரன் கார்டனில் கதவு எண்.14/3 என்ற கதவு எண் உள்ள வீட்டை கிரயம் செய்து கொடுத்துவிட்டு 16.12.2013 ல் அந்த வீட்டை காலி செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2014 லிருந்து 2018 வரை மேற்கண்ட கதவு இலக்க எண்.14/3 ல் வாதி சரண்யா குடியிருந்தார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.